DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.323/2023**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.1

Defence

Court

Name : செல்வராஜ்
Father/ Husband Name : கருப்பையா
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 03.09.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் கொத்தங்குடியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலைபார்த்து வருகிறேன். எதிரியை தெரியும். கடந்த 01.09.2023ம் தேதி மாலை 05-06 மணியளவில் தேவகோட்டையில் இருந்துவிட்டு வீட்டுக்கு வரும்போது பாரதி தோட்டம் அருகே எனது வண்டி இருந்தது. எதை எடுப்பதற்காக அங்கு சென்றேன். எதிரி அங்கு இருந்தார். எதிரி என்னிடம் வெட்டாமல் விடமாட்டேன் என சொல்லி திண்டில் உட்கார்ந்து கொண்டிருந்த கீழிறங்கிய அவர் என் தலையில் அடித்தார். நான் கையால் தடுத்தேன். அதனால் எனது வலது நெற்றியில் மேல்பகுதியில்பட்டது. அதன்பின்னர் சாட்சி பாரதி போன் செய்து தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார். நான் மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது புகார் வாக்குமூலம் கொடுத்தேன். புகார் வாக்கு மூலத்தில் உள்ளற கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம்**

**அ.த.சா.ஆ,1).** போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரி என்னை கம்பியால் அடித்ததாக சொல்லப்படும் கம்பியின் அடையாளம் எனக்கு தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. பாரதி தோட்டத்திற்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் மாலை 05-06 மணியளவில் சென்றேன். எதிரி என்னை அடித்ததாக சொல்லப்படும் சம்பவம் அ.சா.2ன் வீட்டிற்குள் நடந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது அ.சா.2 பாரதி மற்றும் அவரது மனைவி, நாச்சியப்பன் ஆகியோர்கள் இருந்தனர். வேறு யாரும் இல்லை. நான் போவதற்கு முன்பே எதிரி அ.சா.2ன் வீட்டில் இருந்தார். மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் நான் மயக்கம் ஆகிவிட்டதால் மணி பார்க்கவில்லை. ஆனால் இருட்டாக இருந்தது.

2. மருத்துவமனைக்கும் சம்பவ இடத்திற்கும் ஐந்து கி.மீ. தூரம் இருக்கும். காவல்நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் பத்து கி.மீ. தூரம் இருக்கும். இருட்டாக இருந்ததால் என்னை அடித்ததாக சொல்லப்படும் கம்பியை என்னால் அடையாளம் சொல்லமுடியாது. எதிரி என் உறவினர். போலீசார் என்னிடம் முதல் தகவல் அறிக்கையின் நகல் கொடுத்தார். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், சொத்து பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது என்றும், நானாக நடந்து செல்லும்போது தடுமாறி கற்களில் விழுந்ததால் எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.